# அருள்மிகு குன்றத்து குமரன் ஆலயம்

மெல்பேர்ன் - அவுஸ்திரேலியா

# Kundrathu Kumaran Temple

Melbourne - Australia

## பஞ்சபுராணம் - Devotional Songs





**139 Gray Court, Rockbank,**

**Victoria 3335.**

**(Melway 355 G10)**

**Phone – 03 9747 1135 or 0449 179 023**

**Web – kumarantemple.org.au Facebook – kundrathu kumaran**

TECCA

Tamil Educational Cultural & Charitable Association Inc.

P O Box 692

St Albans 3021

ABN 13 046 081 944

## அணிந்துரை - Foreword

உலகில் நமது இந்துமதம், தனது உற்பத்தியை நிர்ணயிக்க இயலாத மிகப் புராதனமானதும், மற்ற மதங்களுக்கெல்லாம் வழி காட்டியாயமைந்ததும், அதன் கோட்பாடுகளை ஆராய ஆரம்பிக்கும் பொழுதெல்லாம் புதுப்புது விஷயங்களை உணர்த்துவதும், அதன் நியதிப்படி ஒழுகுவோர்க்குப் பேரானந்தப் பெருவாழ்வளிப்பதுமாக அமைந்த பழம் பெரும் புனித மதமாகும்.

பண்டைய மக்கள் ஆரம்பத்தில் இயற்கையை வழிபட்டும், புறக்கண்களுக்குப் புலப்படாத அருவங்களை வழிபட்டும் வந்தார்கள். இதனையடுத்துத் தம் குறிக்கோளை அடைவதற்கும், மனதை ஒரு முகப்படுத்துவதற்கு உருவங்களை உருவாக்கி வழிபட்டார்கள். இயற்கையின் அழிவுகளிலிருந்து காப்பாற்ற, இவ்வுருவங்களை மரநிழலில் வைத்தும், மேடை கட்டியும், மரக்கொட்டில் அமைத்தும், பெரிய பாறைகள், மலைகள் போன்றவற்றைக் குடைந்து கோயில்கள் அமைத்தும், சுட்ட களிமண் எனப்படும் செங்கற்களைக் கொண்டு கோயில்கள் அமைத்தும், கருங்கற்களால் வானளாவி கோபுரங்களைக் கொண்ட கோயில்களைக் கட்டியும் நெடுங்காலம் நிலையாக நிற்கவல்ல கோயில்களைக் கட்டினர் என்பது, கோயில் கட்டும் கலை தோன்றி, வளர்ந்த வரலாறு கூறும் உண்மை.

எல்லாம் வல்ல இறைவன், எங்கும் நிறைந்திருப்பினும், திருக்கோயிலில் விசேட சாந்நித்தியம் பெற்று, எழுந்தருளி, எமக்குப் பேரருள் புரிகிறான். அவ்வாறு எழுந்தருளியுள்ள திருத்தலங்கள் உலகெங்கிலும், உள்ளன.

அக்கோட்பாடுகளைப் பின்பற்ற அஸ்திவாரமாக அமைய அநேக அற்புத ஷேத்திரங்களில் பற்பல நாமங்களுடன் ஆண்டவன் எழுந்தருளி ஆன்மகோடிகளுக்குத் திருவருள்பாலித்து வருவது யாவருமறிந்த உண்மை. அங்ஙனம் அமைந்த ஸ்தலங்களில், அவுஸ்ரேலியாக் கண்டத்து. மெல்பேர்ன் நகரத்துக் குன்றத்துக் குமரன் ஆலயம் சிறப்பானது.

ஆலயக் கிரியை வழிபாட்டின் போது பூஜையின் இறுதியாக பஞ்சபுராணத்தை **தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம், திருப்புகழ்** என்ற ஒழுங்கு முறையில் பாடவேண்டும்.

திருஞானசம்பந்தர் முதல் சேக்கிழார் வரை இருபத்தேழு சைவ சமய ஞானியர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பே திருமுறைகள் என்னும் தோத்திரநூல்கள். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூத்தியார் ஆகிய மூன்று நாயன்மார் பாடிய திருப்பாடல்கள் தேவாரம் எனவும் மாணிக்க சுவாமிகள் பாடிய பாடல்கள் திருவாசகம் என்றும் அழைக்கப்படும்.

திருமுறைகளில் உள்ள திருப்பாடல்களில் முக்கியமானவற்றை தெரிந்தெடுத்துத் தொகுத்து அத்துடன் வேறு சில முக்கியமான திருப்பாடல்களையும் உள்ளடக்கி **பஞ்சபுராணம்** என்ற தோத்திர நூலாக அடியார்கள் நலன் கருதி தமிழ் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஆலய நிர்வாகம் பிரசுரித்துள்ளது.

The word Tevaram (தேவாரம்) refers the first seven volumes of the Thirumurai,(திருமுறை) which consists of a collection of twelve-volumes of Tamil Śaiva devotional poetry.

All seven volumes are dedicated to the works of the four most prominent Tamil poets (the Nayanars) of the 7th century, Thirugnaanasambanthar Naayanar, Thirunaavukkarasar Naayanar, Sundaramoorthy Nayanars and Manickavaasagar Naayanar. The singing of Tevaram is continued as a ritual in all temples since the early days.

In the 10th century, during the reign of Raja Raja Chola 1 a collection of these songs was found abandoned in the temple at Chidambaram, along with other religious literary works, and collated by Nambiyandar Nambi. It is during the Chola dynasty that *Tevarams* were recited in all temples.

There are 276 temples revered by these verses are called *paadal petra sthalam* and another 276 places having Shiva temples that are casually mentioned in the verses are classified as *vaipu sthalam*. There are 796 of these songs with a total of more than 8200 stanzas.

Temple Management has provided selected songs from the Thirumurai, together with a few additional songs in this book, '**Devotional Songs'**, in both Tamil and English for the benefit of the devotees.

**B.Sivaramakrishna Sarma**

B. Sivaramakrishna Sarma
BSc(Cey) Dip in Edn,
Retired Director of Education
Ministry of Education & Higher
Education, Sri Lanka.

# பொருளடக்கம்


| | | Page |
|---|---|---|
| 1. | விநாயகர் வணக்கம் | 1 |
| 2. | மெல்பேன் றொக்பாங் முருகன் வாழ்த்துப்பா | 6 |
| 3. | திருஞானசம்பந்தர் நாயனார் தேவாரம் - திருமுறைகள் 1,2,3 | 8 |
| | • திருகோணேச்சர பதிகம், | 11 |
| | • கோளறு பதிகம் | 14 |
| 4. | திருநாவுக்கரசு நாயனார் தேவாரம் - திருமுறைகள் 4,5.6 | 17 |
| 5. | சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம் - திருமுறைகள் 7 | 21 |
| | • திருக்கேதீச்சர பதிகம் | 28 |
| 6. | மாணிக்கவாசகர் நாயனார் - சிவபுராணம் - திருமுறைகள் 8 | 31 |
| | • திருவாசகம் | 37 |
| | • திருவெம்பாவை | 44 |
| | • திருப்பொற் **சுண்ணம்** | 49 |
| 7. | திருவிசைப்பா – திருமுறைகள் 9 | 54 |
| | • திருப்பல்லாண்டு | 60 |
| 8. | திருமந்திரம் - திருமூலர் திருமுறைகள் 10 | 63 |
| 9. | காரைக்கால் அம்மையார் - திருமுறைகள் 11 | 67 |
| | • ஐயடிகள் காடவர் கோன் | |
| | • சேரமான் பெருமாள் நாயனார் | |
| | • நக்கீர தேவ நாயனார் | |
| | • கபிலதேவ நாயனார் | |
| | • பரணதே நாயனர் | |
| | • பட் டினத்தார் அடிகள் | |
| 10. | பெரியபுராணம் - திருமுறைகள் 12 | 69 |
| 11. | மேலதிக பாடல்கள் | |
| | • திருப்புகழ் - அருணகிரி நாதர் | 71 |
| | • கந்தசஷ்டி கவசம் | 79 |
| | • கலைவாணி (சரஸ்வதி) -சகலகலாவல்லிமாலை | 87 |
| | • அபிராமி அந்தாதி | 90 |
| | • விநாயகர் அகவல் | 93 |
| | • வாழ்த்துப்பா - வான்முகில் வழாது | 95 |


திருஞானசம்பந்தர்
திருநாவுக்கரசர்
சுந்தரர்
மாணிக்கவாசகர்